සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

කාන්තා, ළමා කටයුතු සහ සමාජ ආරක්ෂණ අමාත්‍යාංශය - සමාජ ආරක්ෂණ අංශය
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - சமூக பாதுகாப்பு பிரிவு
**Ministry of Women, Child Affairs and Social Security – Social Security Division**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>**My No** DSD/HO/MF/BR/05 | ඔබේ අංකය<br>உமது இல<br>**Your No** ........................ | දිනය<br>திகதி<br>**Date** 2023.11.08 |

அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள் மற்றும்
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்

**2024 ஆம் ஆண்டின் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவினை புதுப்பித்தல், ஆண்டுப் பொதுக் கூட்டத்தினை நடாத்துதல் மற்றும் புதிய நிர்வாக குழுவினை தெரிவு செய்ய நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக**

வருடாந்தம் சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களில் பதிவினை புதுப்பித்தல் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய எனது சம இலக்க 2022.11.15 ஆம் திகதிய கடிதத்திற்கமைய 2023 ஆம் ஆண்டில் சமுர்த்தி வங்கிகள், வங்கிச் சங்கங்களில் பதிவினை புதுப்பித்தல் தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது

02. மேலும் 2017 மார்ச் 07 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2009/08 ம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரான ஆகக் குறைந்தது 30 நாட்களுக்கு முன்னர் (ஒழுங்குவிதி இலக்கம் 5(6)க்கு அமைய) உரிய விண்ணப்ப படிவத்தினை சமர்ப்பித்து பதிவுகளை புதுப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

03. இதற்கமைய தங்களால் 2024 ஆம் ஆண்டிற்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் / வங்கிச் சங்கங்களின் பதிவினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களை **2024 ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு** முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

04. கடந்த வருடங்களைப் போன்று சமுர்த்தி வங்கி மற்றும் வங்கி சங்கங்களின் பதிவு கட்டணத்திற்கான தொகையினை (ரூ.1000/-) சமுர்த்தி வங்கி சங்கங்களின் மூலம் சேகரித்து **ஒரு காசோலையின்** ஊடாக "முகாமையாளர், இலங்கை வங்கி, பத்தரமுல்ல, சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் முதலீட்டு கணக்கு" நடைமுறை கணக்கிலக்கம் 3417925 ற்கு வரவு வைக்குமாறு எழுதப்பட்ட காசோலையினை 60 நாட்களுக்கு நீடித்து விண்ணப்ப பத்திரத்துடன் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

05. பதிவினை புதுப்பித்துக் கொள்வதற்கான விண்ணப்ப பத்திரம், சமுதாய அடிப்படை அமைப்புகளின் தகவல்கள், பொதுச் சபை மற்றும் கட்டுப்பாட்டுச் சபையின் தகவல்கள், நிதி நிலை தகவல்கள் மற்றும் வருமான கூற்று தகவல்களின் படிவங்களுடன் கடந்த ஆண்டில் முன் வைத்த விண்ணப்ப படிவத்திற்கு அமைவாக (2017 மார்ச் மாதம் 07 ஆம் திகதிய 2009/08 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள சகல விண்ணப்ப படிவங்களும் உள்ளடக்கப் படல் வேண்டும்).

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /**1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /**1st Step, 4 th floor,**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

சமுதாய அடிப்படை அமைப்பபுகளின் தகவல்களின் மீண்டும் முன் வைக்கும் போது திருத்தப்பட்ட தகவல்களை மாத்திரம் முன் வைப்பது போதுமானதாகும்.

06. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களில் கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழு என்பவற்றை தெரிவு செய்வதற்கான ஆலோசனைகள் ஐ/ஜ/ஒ 2017/06 மற்றும் 2017.03.17 ஆம் திகதிய சுற்றுநிருப ஆலோசனைக்கு அமைய மேற்கொள்ளுதல் வேண்டும்.

07. புதிய நிர்வாக குழுவினை தெரிவு செய்யாததை காரணம் காட்டி சமுர்த்தி வங்கி, வங்கி சங்கங்களின் புதுப்பித்தல் விண்ணப்பத்தினை தாமதப்படுத்த முடியாது என்பதனை கருத்தில் கொள்ளவும்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்தினை நடாத்துதல் மற்றும் புதிய நிர்வாக குழுவினை தெரிவு செய்தல் என்பன கட்டாயமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ்வாண்டு பொதுக்கூட்டத்தினை நடாத்துவதற்கு ஒருவருக்கு உயர்ந்தபட்சம் ரூ.500/= க்கு உட்பட்ட தொகையினை உபசரிப்பு செலவு மற்றும் ஏனைய செலவுகளாக சமுர்த்தி வங்கி/வங்கிச் சங்கங்களில் இருந்து மேற்கொள்ள முடியும்.

08. மேற்படி ஆலோசனைகளை பின்பற்றி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவினை புதுப்பிப்பதற்கான 2024 ஆம் ஆண்டுக்குரிய விண்ணப்பங்களை விரைவாக சமர்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் தங்களது பிரதேச அதிகார எல்லைக்கு உட்பட்ட சமுர்த்தி வங்கிகள், வங்கிச் சங்கங்களின் பதிவுகளை மேற்கொள்வதற்கான விண்ணப்ப படிவங்களையும் உரிய ஆவணங்களையும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய உரிய காலப்பகுதிக்குள் சமர்பிக்க வேண்டியது வங்கிச் சங்க முகாமையாளரின் பொறுப்பாகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

09. இணைப்பு இல 01 ல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் அவதானத்தினை செலுத்தி சரியான முறையில் பதிவுக்குரிய விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் இப்பதிவு நடவடிக்கைகள் தொடர்பாக ஏதேனும் விளக்கங்கள் தேவையாயின் 0112887489 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

C.D. **களுஆராச்சி**
**பணிப்பாளர் நாயகம்**

**பிரதிகள்:-**

1. செயலாளர், மகளீர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு. - தகவலுக்காக
2. மாவட்ட செயலாளர் / மாவட்ட மேலதிக பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக
3. மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் - தகவலுக்காக
4. பிரதம உள்ளக் கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - தகவலுக்காக
5. பணிப்பாளர் வங்கிச் சமாசம் - தகவலுக்காக
6. சட்ட உத்தியோகத்தர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - தகவலுக்காக
7. தலைவர் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சமாசம் - தகவலுக்காக

Translated by :- I.Aliyar
District Director of Samurdhi - Mannar

**இணைப்பு 01**

| சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களை பதிவு செய்தல் | சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளை பதிவு செய்தல் |
|---|---|
| 1. விண்ணப்ப படிவங்களில் தலைவர், முகாமையாளர் ஆகிய இருவரினதும் ஒப்பம், பெயர், திகதி, பதவி முத்திரை என்பன பொறிக்கப்படல் வேண்டும்.<br>பிரதேச செயலாளர் தலைமையக முகாமையாளரினால் அத்தகவல்கள் சரியானதென உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | 1. விண்ணப்ப படிவங்களில் தலைவர், முகாமையாளர், வங்கிச் சங்க முகமையாளரின் ஒப்பம், பெயர், திகதி, பதவி முத்திரை என்பன பொறிக்கப்படல் வேண்டும். |
| 2. நிறைவேற்றுக் குழுவின் பெயர்பட்டியலில் தலைவர், முகாமையாளர் இருவரினதும் ஒப்பம், பெயர், திகதி, பதவி முத்திரை பொறிக்கப்படல் வேண்டும். | 2. கட்டுப்பாட்டுச் சபை, பொதுச்சபை கூட்ட அறிக்கைகளில் தலைவர், முகாமையாளர் இருவரினதும் ஒப்பம், பெயர், திகதி, பதவி முத்திரை என்பன பொறிக்கப்படல் வேண்டும். |
| 3. நிதி நிலைக் கூற்று மற்றும் வருமான அறிக்கை என்பவற்றில் தலைவர், முகாமையாளர் இருவரினதும் ஒப்பம், பெயர், திகதி, பதவி முத்திரை என்பன பொறிக்கப்படல் வேண்டும். | 3. நிதி நிலைக் கூற்று மற்றும் வருமான அறிக்கை என்பவற்றில் தலைவர், முகாமையாளர் இருவரினதும் ஒப்பம், பெயர், திகதி, பதவி முத்திரை என்பன பொறிக்கப்படல் வேண்டும். |
| 4. பொதுச் சபை கூட்ட அறிக்கையில் தலைவர் மற்றும் செயலாளர் ஒப்பமிட்டு உறுதிப்படுத்திய பிரதியினை இணைத்தல் வேண்டும். | பொதுச் சபை கூட்ட அறிக்கையில் தலைவர் மற்றும் செயலாளர் ஒப்பமிட்டு உறுதிப்படுத்திய பிரதியினை இணைத்தல் வேண்டும். |